## விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 02 - 2021

விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 02 இன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 சனவரி 17 ஆம் திகதிய 5873– எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் பட்டியல் 2, பிரிவு ஐஐ, பீ 3 உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம் கமத்தொழில் அமைச்சானது விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 02 இன் நிறைவேற்றல் மற்றும் அமுல்படுத்தல் முகவராக உள்ளது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, அனுராதபுரம், மட்டக்களப்பு, மொனராகலை, மாத்தளை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் உள்ள சிறுஉடைமை விவசாயிகள் மற்றும் விவசாய வணிகங்களின் விவசாய உற்பத்தித்திறனை அதிகரித்தல், சந்தை நுழைவை மேம்படுத்துதல் மற்றும் பெறுமதிச் சேர்க்கையை முன்னேற்றுதல் என்பவற்றிற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். மேலும், சிறுஉடைமை விவசாயிகளுக்கு போட்டிமிக்கதும் சந்தைவாய்ப்புள்ளதுமான பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் சந்தைத் தேவைப்பாட்டிற்கு ஏற்றவகையில் அவர்களது இயலளவை முன்னேற்றி வர்த்தகமயமாக்கலை நோக்கி நகர்வதற்கு ஆதரவளிப்பதற்கான நடவடிக்கைகளை விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 02 இன் கீழ் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயமான ரூபா 9,175.88 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 64.87 மில்லியன் தொகை சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலதிகமாக கண்டி, அம்பாறை, கிளிநொச்சி மற்றும் வவுனியா போன்ற மாவட்டங்களில் செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றிய நம்பிக்கை நிதியத்திடமிருந்து ரூபா 5,040 மில்லியனிற்கு சமனான யூரோ 25 மில்லியன் பெறப்பட்டுள்ளது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 சனவரி 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்

செயற்திட்டத்தின் செயற்பாடுகள் 5 கூறுகளின் கீழ் பின்வரும் பெயர்களில் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

(அ) நவீன விவசாய தொழில்நுட்ப பூங்காக்கள்
(ஆ) பகுப்பாய்வு மற்றும் கொள்கை ஆலோசனை உதவி
(இ) விவசாயி பயிற்சி மற்றும் இயலளவை கட்டியெழுப்புதல்
(ஈ) உற்பத்தி மற்றும் சந்தை உட்கட்டமைப்பு
(உ) செயற்திட்ட முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

செயற்திட்ட பரப்பில் சிறுஉடைமை விவசாயிகள் மற்றும் விவசாய வணிகங்களின் விவசாய உற்பத்தித்திறனை அதிகரித்தல், சந்தை நுழைவை மேம்படுத்துதல் மற்றும் பெறுமதிச் சேர்க்கையை முன்னேற்றுதல் என்பவற்றிற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். அதன்படி விவசாயிகளினை வலுப்படுத்தல், வேலைவாய்ப்பு உருவாக்கம், இளைஞர்களினை நவீன விவசாயத்தின்பால் கவர்தல் என்பவை செயற்திட்டத்தின் முழுமையான நோக்கமாக இருக்கின்றது. இலங்கை அரசாங்கத்தினால் கடன் வழங்கும் முகவருக்கு வட்டிக்கட்டணமாக ரூபா 302.9 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தும் மூல செயற்திட்ட நோக்கங்கள் பின்னர் வேறுபடுத்தப்பட்டன என அவதானிக்கப்பட்டது. பின்வரும் அவதானிப்புக்கள் அதன்மீது மேற்கொள்ளப்படுகின்றன.

| | கூறுகள் | செயற்பாடுகள் | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | நவீன விவசாய தொழில்நுட்ப பூங்காக்கள் | 07 மாவட்டங்களில் 07 நவீன விவசாய தொழில்நுட்ப செயல்விளக்கப் பூங்காக்களின் வடிவமைப்பு, செயற்பாட்டு உருவாக்கம், முகாமை மற்றும் இடமாற்றம் | ஆலோசகரின் பிஏடி மற்றும் டிஓஆர் (ீயுனு யனெ வுழுசு) என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி உயர் பெறுமதிவாய்ந்த உற்பத்திப் பொருட்கள் அல்லது புதிய வகை உற்பத்திப்பொருட்கள் என்பவை விவசாயிகளுக்கு அறிமுகம் செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கு பதிலாக வாழை, மா, கொய்யா, அன்னாசி மற்றும் மிளகாய் போன்ற பயிர்களை வளர்ப்பதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. | சாத்தியவள ஆய்வில், உயர்சந்தை சார்ந்ததும் உயர் வருமானம் தரக்கூடியதும், சுற்றுச்சூழலுக்கு ஏற்றதும் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிர்த்தொகுதிகளுக்காக தெரிவு செய்யப்பட்ட பகுதியில் வளரக்கூடிய பயிர்களை ஜஎஸ்பி அடையாளம் கண்டுள்ளது. புதிய மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி பொருட்களுக்காக | செயற்திட்டத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை கடைப்பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | எனினும், அங்கீகரிக்கப்பட்டு முன்மொழியப்பட்ட தொழில்நுட்பங்கள் இலங்கைக்கு புதிதானதல்ல என்பதுடன் கணக்காய்வு திகதியான 2022 மார்ச் 01 வரையிலும் சர்வதேச சந்தை அறிமுகப்படுத்தப் பட்டிருக்கவில்லை என வெளிப்படுத்தப்பட்டது. | சர்வதேச சந்தைகளில் கேள்வி அதிகரித்து வருவதனால் வெப்பமண்டல பழ வகைகள் உயர் பெறுமதிவாய்ந்த பயிர்களாக அடையாளம் காணப்பட்டன. | |
| (ஆ) | பகுப்பாய்வு மற்றும் கொள்கை ஆலோசனை உதவி | கொள்கை அபிவிருத்தி | கூறின் கீழ் கொள்கை அபிவிருத்திக்காக மொத்தம் ரூபா 624.67 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 4.28 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அதன்படி, ஆலோசனை நிறுவனத்திற்கு ரூபா 69.55 மில்லியன் கிரயத்தில் 08 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக ரூபா 65.58 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. எனினும், இதன் மீதான இறுதி அறிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதியில் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பகுப்பாய்வு மற்றும் கொள்கை ஆலோசனை உதவி மீதான இறுதி அறிக்கைகள் பெறப்பட்டுள்ளதுடன் அக்கரையுடைய தரப்பினர்களுடன் இவ்வறிக்கைகளின் விளைவுகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு கொள்கை கழகம் ஒன்றினை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுக்கொண்டிருக்கின்து. இந்த உபகூறின் கீழ் ஐ.அ.டொலர் 4.2 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தாலும் பின்னர் இது ஐ.அ.டொலர் 1.0 மில்லியனாக திருத்தப்பட்டது. | செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்கும் அறிவுவாய்ந்த பொறுப்புள்ள தரப்பினர்களுக்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | விவசாயி பயிற்சி மற்றும் இயலளவை கட்டியெழுப்புதல் | விவசாயி பயிற்சி | முன்னைய ஆண்டுகளில் விவசாயி பயிற்சிகளுக்காக மொத்தம் ரூபா 50.2 மில்லியன் ஏற்பட்டிருந்தாலும் எதிர்பார்த்தபடி நிகழ்ச்சித் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், கணக்காய்வு | முன்னோடி கொத்துகளுக்கான எவ்பிஎஸ் (குடீளு) பயிற்சி நடாத்தப்பட்டிருந்ததுடன் ஒரு நாளைக்கு 03 மணித்தியாலங்கள் படி 31 அமர்வுகளை இந்நிகழ்ச்சித்திட்டம் உள்ளடக்கியிருந்தது. எனவே, 31 அமர்வுகளை பூர்த்தி | ஒப்பந்த உடன்படிக்கையின் தேவைப்பாடுகளுக்கு இணங்க சர்வதேச சேவை வழங்குனர் மீது தாக்கம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திகதியான 2022 சனவரி 03 வரையிலும் சர்வர்தேச சேவை வழங்குனரின் கீழ் விவசாயி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | செய்துகொள்வதற்காக பௌதீக பயிற்சி திட்டங்கள் நடாத்தப்பட்டன. இவ்வமர்வுகளில், 31 நாட்களைக்கொண்ட நீண்ட காலப்பகுதி காரணமாக நலிவான வரவுகளும் பதிலாள் உறுப்பினர்களின் பங்குபற்றுதலும் காணப்பட்டன என கண்டறிப்பட்டது. | |
| (இ) உற்பத்தி மற்றும் சந்தை உட்கட்டமைப்பு | மேம்படுத்தல் மற்றும் உற்பத்தி மறுசீரமைப்பு மற்றும் சந்தை உட்கட்டமைப்புக்கள் | சர்வதேச சேவை வழங்குனர் ஒருவரை நியமிப்பதில் காணப்பட்ட தாமதம் காரணமாக முன்னோடி செயற்திட்ட பரப்புக்களின் கீழ் கிரமப்புற வீதிகள், கிராமப்புற தாங்கிகள், விவசாய கிணறுகள் மற்றும் களஞ்சிய வசதிகள் என்பவற்றை புனரமைப்பதற்காக ஐ.அ.டொலர் 6.15 மில்லியன் தொகை செயற்திட்டத்திற்கு ஏற்பட்டது. எனினும், நவீன தொழில்நுட்ப செயல்விளக்க பூங்காக்கள் கணக்காய்வு திகதியான 2022 சனவரி 03 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை | உபகூறு 2.3 இன் உற்பத்தி மற்றும் சந்தை உட்கட்டமைப்பு அபிவிருத்தி இன் கீழ் செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தில் (ீயுனு) குறிப்பிட்டபடி மூன்று பிரதான செயற்பாடுகள் காணப்படுகின்றன. சிறியளவிலான நீர்ப்பாசன உட்கட்டமைப்பு மற்றும் தற்போதுள்ள நீர்த்தாங்கிகள் மற்றும் நீர்ப்பாசன முறைமை என்பவற்றினை தரமுயர்த்தலும் புனர்நிர்மானம் செய்தலும், தெரிவு செய்யப்பட்ட உற்பத்திகள் மற்றும் சந்தை அணுகல் வீதிகள் என்பவற்றினை மேம்படுத்தல், புதிய கள அணுகல் பாதைகளினை நிர்மானித்தல் ஆகும். | செயற்திட்டத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை கடைப்பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | விவசாய தொழில்நுட்ப செயல்விளக்க பூங்காக்களிற்கான ஆலோசனை சேவையை வழங்குவதற்கான ஒப்பந்தம். ரூபா 271.94 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 4.09 கிரயத்தில் 2019 ஒக்தோபர் 16 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், கணக்காய்வு திகதியான 2022 சனவரி 05 வரையிலும் இது பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அதன்மீது மொத்தமாக ரூபா 183 மில்லியன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக செலுத்தப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் அதன்மீது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | | |
| | (i) அத்தியாயம் ஈ இன் பிரிவு 29 இன் துணை வாசகம் 29 இன் பிரகாரம் முழு ஒப்பந்த காலத்திற்கும் 04 முக்கிய சர்வதேச ஆலோசகர்கள்களையும் 02 தேசிய ஆலோசகர்களையும் நியமிக்க உடன்பட்டுள்ளது. எனினும், ஒப்பந்தக்காரர் ஒரு சர்வதேச ஆலோசகரை மாத்திரமே 2019 தொடக்கம் 2022 சனவரி வரையிலான காலப்பகுதியின் போது குழுத்தலைவராக நியமித்தார். | கொவிட் 19 நிலைமை காரணமாக விதிக்கப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச பயணத்தடைகள் இவ்விடயத்திற்கான முக்கிய பங்களிப்பு செய்த காரணி என்பது குறிப்பிடத்தக்கது. | ஒப்பந்த உடன்படிக்கையின் தேவைப்பாடுகளிற்கு இணங்க சர்வதேச சேவை வழங்குனர் மீது தாக்கம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) மேற்கூறிய முக்கிய பணியாளர் ஒப்பந்தங்களை தவிர ஒப்பந்த உடன்படிக்கையின் கீழ் செயற்திட்ட பரப்பிற்குள் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நன்கு தகைமையும் அனபவமும் கொண்ட பணியாளரை நியமிக்க உடன்பட்டது. எனினும், கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட திகதியான 2022 சனவரி 03 வரையிலும் போதுமான பணியாளர் நியமிக்கப்படவில்லை என கள ஆய்வின் கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட சோதனை பரீட்சிப்பில் வெளிப்படுத்தப்பட்டது. | தற்போது ஆலோசகர் மற்றும் டிசி மற்றும் சிசி (னுஊஎ ரூ ஊஊஎ) பட்டியல் மூலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களும் கொத்து ஒருங்கிணைப்பாளர்ளும் நியமிக்கப்பட்டுள்ளனர். | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| (iii) 20 கொத்து அபிவிருத்தி திட்டத்தில், 01 கொத்து அபிவிருத்தி திட்டம் மாத்திரமே கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட திகதியான 2022 சனவரி 03 வரை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | ஐஎஸ்பி உடன் கைச்சாத்திடப்பட்ட மூல ஒப்பந்தத்தில் அனைத்து கொத்து அபிவிருத்தி திட்டங்களும் ஓரே நேரத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். திட்டமிட்டபடி ஏடிபி க்களின் அமுல்படுத்தலை நிச்சயிக்கும் நோக்கில் சிடிபி களை தனித்தனியாக சமர்ப்பித்து ஏற்றுக்கொள்வதற்கு இருதரப்பினர்களும் உடன்பட்டனர். | -மேற்படி- |
| (iv)சர்வதேச சேவை வழங்குனரின் இவ்வொப்பந்தக் காலப்பகுதி 2021 திசெம்பர் 31 இல் காலாவதியாகியிருந்தும் ஒப்பந்த காலப்பகுதி, செயற்திறன் முறி, காப்புறுதி மற்றும் முற்பண கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய வங்கி உத்தரவாதம் என்பவற்றினை நீடிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஐஎஸ்பி ஒப்பந்தத்தின் செல்லுபடியாகும் காலப்பகுதிற்கு ஐஎஸ்பி இன் கொடுப்பனவு பட்டியலை திருத்தப்பட வேண்டியிருந்ததுடன் செயலாளர் மூலம் திருத்திய கொடுப்பனவு பட்டியலை சமர்ப்பிப்பதற்கு 2022 சனவரி 31 வரை நீடிக்கப்பட்டது மற்றும் இதனை திருத்திய பிறகு 2023 யூன் இறுதி வரை நீடிப்பதற்கு ஐஎஸ்பி மூலம் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. | ஒப்பந்த காலப்பகுதி, செயற்திறன் முறி, முற்பண கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய காப்புறுதி மற்றும் வங்கி உத்தரவாதம் என்பவற்றினை நீடிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v)கொள்கை ஆய்வொன்று ரூபா 2.99 மில்லியன் செலவில் மேற்கொள்ளப்பட்டிருந்தும் கணக்காய்வு திகதியான 2022 யூன் 06 வரையிலும் பொருத்தமான விவசாயி உற்பத்தியாளர் ஒழுங்கமைப்பு இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் விவசாய திணைக்களத்தின் கீழ் இதுவரை உற்பத்தியாளர் ஒழுங்கமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், அவ் விவசாய சங்கங்களிற்காக சட்டப்பிணைப்புக்கள், அரசியலமைப்புக்கள் காணப்படவில்லை என்பதுடன் அவைகள் கம்பனி பதிவாளர் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்படாது. அதன் காரணமாக, செயற்திட்ட உதவியானது ஒருமுறை முடிந்தாலும் அனைத்து விவசாய ஒழுங்கமைப்புக்களும் சிதைந்து போகலாம். செயற்திட்ட எண்ணக்கருவின் படி கொத்து நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு முன்பாக விவசாயி உற்பத்தியாளர் ஒழுங்கமைப்பு உருவாக்கப்பட வேண்டும். | ஏடிடிபி (யுவுனூீஎ) இற்கான மிகவும் பொருத்தமான விவசாயி வணிக மாதிரியை இனங்காண்பதற்கு கொள்கை ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது விவசாயி உற்பத்தியாளர் ஒழுங்கமைப்புக்களின் (எவ்பிஓ) குறைபாடுகளை எடுத்துரைக்கப்பட்டுள்ளதுடன் இந்நோக்கத்திற்காக ஏனைய தெரிவுகளை மதிப்பீடும் செய்துள்ளது. மதிப்பீடு மற்றும் அனைத்து சாத்தியப்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் பட்டியற்படுத்தப்படாத பொதுக் கம்பனிகளை உருவாக்குவதற்கு தீர்மானித்துள்ளது. | செயற்திட்டத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை கடைப்பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பயனாளி தகவல் முறைமையினை வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல், நிறுவுதல் மற்றும் பராமரித்தல் என்பவற்றுக்கான ஒப்பந்தம் ரூபா 8.25 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2018 ஒக்தோபர் 28 இல் வழங்கப்பட்டதுடன் 2019 பெப்ரவரியில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. ரூபா 1.65 மில்லியன் மற்றும் ரூபா 3.4 மில்லியன் தொகை முறையே 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் செலுத்தப்பட்டிருந்ததுடன் 38 மாதங்கள் கடந்த பின்னர் 2021 திசெம்பர் 30 ஆம் திகதிய கணக்காய்வு வரையிலும் சம்பந்தப்பட்ட பணிகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து தொகுதிகளும் இந்த எம் மற்றும் ஈ எம்ஜஎஸ் இல் உள்ளடக்கப்பட்டன. ஆரம்பத்தில், நாங்கள் செயற்பாட்டு நடவடிக்கை மற்றும் இதன் செயன்முன்னேற்றம் என்பவற்றுடன் அறிக்கையுடன் தொடர்புபட்ட செயற்பாட்டு நடவடிக்கை மற்றும் செயன்முன்னேற்றம் என்பவற்றினை இந்த எம்ஜஎஸ் ஊடாக உள்ளீடு செய்ய வேண்டும். இது தவிர வாழ்க்கை சுழற்சி, வாழ்க்கை சுழற்சி நோக்குனர் மற்றும் ஏனையவை போன்ற மேலதிக தொகுதிகளை உள்ளடக்கியுள்ளது. தற்போது, எம்ஜஎஸ் தொழிற்படுவதுடன் செயற்பாட்டு திட்டங்களை உள்ளீடு செய்யக்கூடியதாகவும் அறிக்கைகளினை எடுக்ககூடியதாகவும் உள்ளது. அத்துடன் மாதாந்த செயன்முன்னேற்றத்தையும் உள்ளீடு செய்ய முடியும். இது 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படுகின்றது. | ஒப்பந்தக்காரர் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மேற்பார்வை கண்காணிப்பின் மீது போதுமானதும் வினைத்திறனுமானதுமான ஒப்பந்த முகாமைத்துவ முறைமை அமுல்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | விவசாயி வணிக பாடசாலை பயிற்சி மற்றும் விவசாயி உற்பத்தியாளர் ஒழுங்கமைப்பு பயிற்சி என்பவற்றின் மீதான ஒப்பந்தங்கள் ரூபா 100.78 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டதுடன் மீளாய்வாண்டில் இறுதியில் சேவை வழங்குனருக்கு மொத்தம் ரூபா 50.2 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. கிடைக்கப்பெற்ற தகவலின் படி சேவை வழங்குனரின் நலிவான திட்டமிடல், விவசாயிகளினை தெரிவு செய்தல் செயன்முறையில் உள்ள குறைபாடுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுதல் குறைபாடுகள் காரணமாக எதிர்பார்த்த மட்டத்திற்கு அமைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னோடி கொத்துகளுக்காக எவ்பிஎஸ் (குடீளு) பயிற்சி நடாத்தப்பட்டிருந்ததுடன் ஒரு நாளைக்கு 03 மணித்தியாலங்கள் படி 31 அமர்வுகளை இந்நிகழ்ச்சித்திட்டம் உள்ளடக்கியிருந்தது. எனவே, 31 அமர்வுகளை பூர்த்தி செய்துகொள்வதற்காக பௌதீக பயிற்சி திட்டங்கள் நடாத்தப்பட்டன. இவ்வமர்வுகளில், 31 நாட்களைக்கொண்ட நீண்ட காலப்பகுதி காரணமாக நலிவான வரவுகளும் பதிலாள் உறுப்பினர்களின் பங்குபற்றுதலும் | ஒப்பந்த உடன்படிக்கையின் தேவைப்பாடுகளிற்கு இணங்க சர்வதேச சேவை வழங்குனர் மீது தாக்கம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காணப்பட்டன. கொவிட் 19 தொற்றுநோய் பரவலினால் இந்நிலை தீவிரமடைந்ததுடன் இதன் காரணமாக பௌதீக பயிற்சியானது சாத்திமற்றதாக காணப்பட்டது | |
| (ஈ) | வடமத்திய மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு சோதனை பரீட்சிப்பின் படி மிளகாய் பயிர்ச்செய்கைக்காக முறையே பொரவெவயில் 30 ஏக்கர், நெழுவெவயில் 25 ஏக்கர், றத்மல்தென்னவில் 03 ஏக்கர் மற்றும் பொகஸ்வெவயில் 05 ஏக்கர் காணிகள் தெரிவுசெய்யப்பட்டிருந்தன. எனினும் அந்நிலங்கள் எதிலும் நில அளவுத் திட்டங்கள், ஒதுக்கப்பட்ட காணி எல்லை நிர்ணய அனுமதி, ஒவ்வொரு பயனர்ளிகளுக்குமான 0.5 ஏக்கர் ஒதுக்கீடுகள் காணப்படவில்லை. எனினும், செயற்திட்டம் நிலப்பயன்பாட்டுக்காக மஹாவலி அதிகார சபை மற்றும் பயனாளிகளுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. இவைகள் எதுவுமின்றி காணி சுத்திகரிப்பு மற்றும் தயார்படுத்தல் பணிகள் ஒப்பந்தம் ரூபா 16.2 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டு மீளாய்வாண்டின் போது மொத்தம் ரூபா 7.7 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வு திகதியான 2022 சனவரி 03 வரையிலும் சம்மந்தப்பட்ட பணிகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | ஒப்பந்தக்காரர் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மேற்பார்வை கண்காணிப்பின் மீது போதுமானதும் வினைத்திறனுமானதுமான ஒப்பந்த முகாமைத்துவ முறைமை அமுல்படுத்தப்பட வேண்டும். |

## 2.3 குறைபயன்பாடுடைய வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| கிடைக்கப்பெற்ற தகவலின் படி செயற்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம் மிதமான திருப்தி மட்டத்தில் காணப்பட்டது. அதன்காரணமாக, கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 9,121.88 மில்லியனிற்க சமனான ஐ.அ.டொலர் 62.5 மில்லியன் ஒதுக்கீட்டில் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 05 ஆண்டுகள் கடந்த பிறகு 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியான மொத்த ஒதுக்கீட்டில் 50.9 சதவீதம் பிரதிபலிக்கின்ற ரூபா 4,649.4 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 25.8 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், பதுளை, கிளிநொச்சி, அம்பாறை மற்றும் வவுனியா மாவட்டங்களை உள்ளடக்கி இதன் புவியியல் பரப்பினை யூரோ 25 மில்லியன் | கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களினால் திட்டமிட்ட படி செயற்திட்டத்தை அமுல்படுத்தமுடியவில்லை. | நிதிப்பயன்பாட்டின் வினைத்திறனை அதிகரப்பதற்கு செயற்திட்ட நடவடிக்கைகள் முறையாக திட்டமிடப்பட வேண்டும். |

உதவியுடன் 2020 ஆம் ஆண்டில் செயற்திட்டம் விரிவுபடுத்தியது. எனினும், நிதிகளின் குறைபயன்பாடு காரணமாக மீளாய்வாண்டின் போது விவசாய அமைச்சின் கீழ் பராமரிக்கப்படும் பொது நிறுவனங்களுக்கு மொத்தம் ரூபா 1050 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 2.4 புறம்பான செயற்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| விவசாய இராஜாங்க அமைச்சின் அலுவலகத்திற்காக ஸ்மார்ட் டிவி கொள்வனவிற்காகவும் சுதந்திர தின பத்திரிகை விளம்பரத்திற்காகவும் ரூபா 0.74 மில்லியன் தொகை செயற்திட்த்திற்கு ஏற்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | பிஏடி (ீயுனு) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகளின் விவகாரம் மீது மக்களுக்கு விழிப்புணர்வினை வழங்குவது ஒரு நிபந்தனையாக இருக்கின்றது. | செயற்திட்த்தின் தொழிற்பாட்டு கிரயத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |